# உயிரிழந்த இளைஞனின் சடலத்துடன் நீதி கேட்டு பொதுமக்கள் போராட்டம்!




## வட்டுக்கோட்டையில் கவனவீர்ப்பு

யாழ் - வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழுந்ததாகக் கருதப்படும் இளைஞரான சித்தன்கேணியை சேர்ந்த நாகராசா அலெக்ஸின் சடலத்துடன் அப்பகுதி மக்கள் நீதி கேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இளைஞனின் இறுதிக் கிரியைகள் சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, உடல் தகனத்துக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லும்போது அப்பகுதி மக்களால் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அலெக்ஸ் இறந்து 48 மணி நேரம் கடந்தும் இது வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸ் விசாரணைக்குழு 48 மணி நேரத்திற்கு மேலாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். எனினும், பொலிசாரின் விசாரணை மீது எமக்கு திருப்தி ஏற்படவில்லை. மாறாக, அவர்கள் மீது சந்தேகம் தான் வலுத்து வருகின்றது!, எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (04)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை 21.11.2023 கதிர் 117



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்




## யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் வார நினைவேந்தல்

தமிழரின் உரிமைக்காக உயிர் நீத்த மாவீரர் வார நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நினைவு கூரப்படவுள்ள நிலையில் மாவீரர் வார முதலாம் நாள் நினைவேந்தல் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நினைவுத் தூபியில் இன்று நண்பகல் 12 மணியளவில் மாணவர்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் தூபியைச்சுற்றி சிவப்பு மஞ்சள் நிறத்திலான வர்ணக்கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

## வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு உடனே தண்டனை வழங்க வேண்டும்!

### அங்கஜன் இராமநாதன் எம்.பி அறிக்கை

மனித உரிமைகளை மதிக்காது மிருகத்தனமாக செயற்பட்ட யாழ்ப்பாணம்- வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சித்தங்கேணியைச் சேர்ந்த 26வயதான நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் 2➤

## மின்சாரத்துறைச் சீர்திருத்தங்களுக்கான உத்தேச வரைவு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி - கஞ்சன விஜேசேகர




நேற்றையதினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மின்சாரத் துறை சீர்திருத்தங்களுக்கான உத்தேச வரைவுக்கு அமைச்சரவை பச்சைக்கொடி காட்டியுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

புதிய சட்டமூலம் வர்த்தமானியாக வெளியிடப்பட்டு, நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் எனவும், நாடாளுமன்ற அனுமதியைப் பெற்ற பின்னர், இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு, செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்த புதிய மின்சாரச் சட்டத்தின் ஊடாக திட்டங்கள் கொண்டுவரப்படும், என்றும் அவர் குறிப்பிட்டார். புதிய சட்டமானது மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநி யோகம் ஆகியவற்றில் தனியார் துறையின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள அனுமதிக்கிறது, என்பதையும் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட் டியுள்ளார். (து)

## மாவீரர் பெயர் பொறித்த கல்வெட்டு திலீபன் நினைவாலயத்தில் திறப்பு

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ளது. 2➤

## 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடக்காது!

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) இலங்கையில் இருந்து தென்னாபிரிக்காவிற்கு 2➤

## இலங்கை வருகிறது மேலுமொரு சர்வதேச எரிபொருள் நிறுவனம்



அமெரிக்காவின் முன்னணி பெட்ரோலியப் பொருட்கள் விநியோகஸ்தரான RM Parks Inc., Shell PLC தயாரிப்புகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக இலங்கை முதலீட்டு சபையுடன் 110 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட RM Parks, ஷெல் உடன் இணைந்து இலங்கையில் பெற்றோலிய விற்பனைக்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் இந்த உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் சார்பாக சாந்தனி விஜேவர்தன 2➤

# சிவனொளி பாத மலைக்கு வருகின்ற பக்தர்கள் பொலித்தீன், பிளாஸ்டிக்கை தவிர்க்கவேண்டும்!

சிவனொளி பாத மலையை வழிபட வரும் பக்தர்களால் வீசப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் வருடாந்தம் பெருமளவு பணத்தைச் செலவிடுவதாகவும், நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் மட்டும் 2 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான சிவனொளி பாதமலை யாத்திரை காலம் டிசம்பர் 26 ஆம் திகதி போயா அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பக்தர்கள் அனைவரும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுகளை எடுத்துச் செல்லாமல் சிவனொளி பாதமலையை தரிசிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் பக்தர்களுக்கு தேவையான வீதிகள், நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பொது வசதிகள் எதிர்வரும் நாட்களில் அபிவிருத்தி செய்யப்படும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (04)

# எல்லை தாண்டிய இலங்கை மீனவர் ஐவர் இந்தியக் கரையோரக் காவலரால் கைது!

இலங்கை மீனவர்கள் ஐவரை இந்தியக் கரையோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

மன்னாரில் இருந்து 4930 இலக்கப் படகில் கடற்றொழிலுக்குச் சென்ற இலங்கை மீனவர்கள் ஐவரை இந்தியக் கரையோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் இன்று மதியம் கைதாகியுள்ளனர்.

இவ்வாறு கைதான இலங்கை மீனவர்கள் ஐவரும் தனுஷ்கோடிக்குக் கொண்டு செல்லப்பட்டு தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எல்லை தாண்டி வந்த குறித்த இலங்கை மீனவர்கள், கடற்றொழிலுக்கு வந்தார்களா அல்லது கடத்தல் நடவடிக்கைக்காக வந்தார்களா? என்பது தொடர்பாகத் தமிழகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

# இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பெப்ரவரியில்

உத்தேச இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 2024 பெப்ரவரி 3 ஆம் திகதி கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இன்று நடைபெற்ற அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

குணவர்தனவின் கூற்றுப்படி, 2023 டிசம்பரில் பல சுற்று விவாதங்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்.

மேற்படி கலந்துரையாடலின் சுற்று 6 மற்றும் 7 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு இணங்க, இலங்கையின் சுங்க வரிகளை விடுவிக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாடு, வளர்ச்சியை வளர்ப்பதற்கும், பல தசாப்தங்களில் மோசமான நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கும், அதன் தாக்கப்பட்ட பொருளாதாரத்திற்கு உதவுவதற்கும் வர்த்தக ஒப்பந்தங்களில் தனது கவனத்தை புதுப்பித்து வருகிறது. (த)

## 19 வயதுக்குட்பட்டோருக்கான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள நிர்வாக நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு ஐசிசி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகமதாபாத்தில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆலோசனைக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்ட- தாகவும் கூறப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் சபை இடைநிறுத்தப்பட்டாலும் இலங்கை அணி தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட முடியும் எனவும் சர்வதேச கிரிக்கட் சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், கிரிக்கெட் விளையாட்டைத் தொடர அனுமதிக்குமாறு தான் ஐசிசியிடம் கோரிய நிலையில் அந்த கோரிக்கையை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர் என இலங்கைக் கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்திருந்தார். (04)

## மாவீரர் பெயர் பொறித்த கல்வெட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இன்று மாலை 6 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (04)

## இலங்கை வருகிறது மேலுமொரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மணிலால் ஜயசிங்க ஆகியோரும், RM Parks நிறுவனத்தின் சார்பாக ஜேசன் காலிசன் மற்றும் உப தலைவர் ஜஸ்டின் டிவிஸ் ஆகியோரும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

புதிய ஒப்பந்தத்தின்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 150 உரிமை பெற்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் இயக்குவதன் மூலம் இலங்கையில் பெட்ரோலியம் தொடர்பான உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வணிகத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகத்துடன் மேற்கொள்ளவுள்ள நீண்ட கால ஒப்பந்தத்தின் படி, பெட்ரோல், டீசல், ஜெட் ஏ-1, மண்ணெண்ணெய் உள்ளிட்ட பெட்ரோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் இந்த நிறுவனம் ஈடுபடவுள்ளது. (04)

## வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் யாழ் மாவட்டத்தில் இடம்பெறுவது இது முதல் தடவை அல்ல. ஆனால், இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும்.

சந்தேக நபர்களைத் தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. ஆனால், இங்கு பொலிஸார் சந்தேக நபர்களை வலுக்கட்டாயமாகக் குற்றவாளிகளாக்கி விடுகின்றார்கள். அவர்கள் சந்தேக நபர்களை மனிதராக மதிப்பதுமில்லை.

மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத பொலிஸார் எந்தத் தருணத்திலும் பொலிஸாராக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்த இளைஞனை பொலிஸ் காவலரணில் வெளிப்படையாகக் காட்சிப்படுத்தவில்லை. இளைஞனின் குடும்பத்தாரிடம் இளைஞனை வெளிப்படுத்தவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக 24 மணித்தியாளத்திற்குள் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய சந்தேக நபரை நான்கு தினங்கள் பிரத்தியேக மறைவிடம் ஒன்றில் வைத்து உணவு கொடுக்காது மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இளைஞனது மரணத்திற்கு வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சகல பொலிஸாரும் பொறுப்புக் கூற வேண்டும். உடனடியாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இளைஞனது மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் அனைவரது பதவிகளும் பறிக்கப்பட்டு - கைது செய்யப்பட்டு, பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற்றுத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்களை மறைத்து வைத்துத் தாக்கி, தமது வாக்குமூலங்களை திணிப்பதற்கான பிரத்தியேக இடங்கள் இருப்பதனை அறிய முடிகிறது.

மனித உரிமைகளைப் பேணும் நிறுவனங்கள் பலவும் செயற்பட்டு வரும் நிலையில் பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

உயிரிழந்த இளைஞனது குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டிய அதேநேரம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதனையும் உறுதி செய்ய வேண்டும், எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (01)




**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



# கர்நாடக சங்கீத இசை நாடகப்பாடல் போட்டி தேசிய ரீதியில் பருத்தித்துறை யா. சென்தோமஸ் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலை முதலிடம்

கந்த 18 ஆம் திகதி அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் இசை நாடகப்பாடல் பிரிவில் பருத்தித்துறை யா. சென்தோமஸ் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலை மாணவிகள் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

குறிப்பிட்ட பாடசாலையானது கலை நிகழ்வொன்றில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றமை இதுவே முதல் தேவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் நாட்காட்டி வெளியீட்டு நிகழ்வு



(ஹஸ்பர்)

திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் நாட்காட்டி வெளியீட்டு நிகழ்வு அண்மையில் திஹாறிய வாரன வீதியில் அமைந்திருக்கும் தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரியின் அதிபர் ஏ.ஜெ. எம். புர்க்கான் தலைமை தாங்கினார். நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக இலங்கை ஒலிபர்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜெ.எப்.றினூசியா மற்றும் மேமன் நலன்புரி மன்றத்தின் பொது முகாமையாளர் ஆசிரியர் நூர்தீன் யாகூப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உபதலைவர் அஸ்மி அஸ்ரப் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் சஹ்னி மற்றும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் எம்.அர்பகான் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நிகழ்வின் நன்றி உரை சிராஜ் நாபியினால் நிகழ்த்தப்பட்டது.

பாடசாலையின் எதிர்காலத் திட்டமிடல் தொடர்பாக பாடசாலை அதிபரும் உரை நிகழ்த்தினார்.

நாட்காட்டிக்கான அனுசரணை வழங்கியோருக்கான நினைவுச் சின்னங்களும் அதிபரால் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் பங்கேற்றோருக்கு நாட்காட்டியின் முதல் பிரதிகளும் வழங்கப்பட்டன.



# புலமையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற மாணவிக்குக் கௌரவிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி கல்முனை கல்வி வலயத்தில் அதிகூடிய புள்ளிகளைப் (186) பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவி உமாரூபன் சஸ்வினாவை, அதிபர் அருட்சகோ ரெஜினோல்ட் தலைமையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹுதுல் நஜீம் பாராட்டிக் கௌரவித்தபோது.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)

# அல்- மிஸ்பாஹ்வில் புலமை மாணவர் கௌரவிப்பு நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயத்தின் கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், வெட்டுப் புள்ளிகளை அண்மித்த மாணவர்கள் மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிரதி அதிபர் எம்.ஆர்.எம். நௌஸாத் அவர்களின் நெறிப்படுத்தலில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரஸாக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற டீ.மர்யம் ரஹா- (168), ஏ.பி. எம்.நாசித்- (162), எம்.எப்.பாத்திமா சாரா- (150), கே.எம். ஹம்தூன்-(148) ஆகிய மாணவர்களுக்கு பாடசாலையின் பழைய மாணவரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், இலங்கை உதைப்பந்தாட்சம்மேளனத்தின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளரும், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளரும், கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகத்தின் பொதுச் செயலாளருமான எம்.ஐ.எம். அப்துல் மனாஃப்பின் அனுசரணையில் விசேட பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இம்மாணவர்களுக்கு தரம் 1 முதல் தரம் 5 வரை கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் மிகவும் திறன்பட ஆசிரியர்களை வழிப்படுத்தி, மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஆரம்பப் பிரிவுப் பகுதித் தலைவர் ஏ.எம். ஜுனைதீன் ஆசிரியருக்கும், மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடசாலையின் அதிபர் இந்நிகழ்வின் ஸ்ரீபோது நன்றி பாராட்டி, வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.



# காஸா மருத்துவமனை மீது எறிகணைத் தாக்குதல் 12 பேர் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிப்பு




காஸாவிலுள்ள மருத்துவமனையொன்றில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அந்தப் பகுதி சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

காஸாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்தோனேசியன் மருத்துவமனையைச் சுற்றிலும் நடந்த மோதலின்போது அதன் 2ஆவது தளத்தில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 12 பேர் காயமடைந்தனர், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசி கடந்த மாதம் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர், அந்த நாட்டுக்குள் அதிரடியாக ஊடுருவியும் சுமார் 1,200 பேரை கொலை செய்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அரசு சூளுரைத்தது. அதற்காக காஸா பகுதியை ஒரு மாதத்துக்கும் மேல் முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் காஸாவுக்குள் நுழைந்து தாக்குல் நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, காஸாவின் மிகப் பெரிய அல்-ஷிஃபா மருத்துவமனையை 5 நாள்களாக முற்றுகையிட்டு தாக்குதல் நடத்திய இஸ்ரேல் படையினர் அந்த மருத்துவமனைக்குள் கடந்த புதன்கிழமை நுழைந்தனர்.

ஹமாஸ் அமைப்பினர் அந்த மருத்துமனையில் இருந்து செயல்பட்டதற்கான ஆதாரங்களையும், மருத்துவமனைக்குக் கீழே ஹமாஸின் தலைமையகம் இருந்ததற்கான ஆதாரங்களையும் இஸ்ரேல் படையினர் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

அல்-ஷிஃபா மருத்துவமனை மட்டுமின்றி காஸாவின் பிற மருத்துவமனைகளிலும் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியிருந்து செயல்படுவதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது. இதனால் அந்த மருத்துவமனைகளை சுற்றி வளைத்து இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தோனேசியன் மருத்துவமனையைச் சுற்றிலும் இஸ்ரேல் படையினருக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மருத்துவமனையில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டு 12 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

காஸாவில் தற்போது நடைபெற்று வரும் சண்டையில் இதுவரை 13,000த்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தரவுகள் கூறுகின்றன. (04)

# ஆஜென்ரீனாவிற்கு வலது சாரி அதிபர்



ஆஜென்ரீனாவின் புதிய அதிபராக வலதுசாரிச் சிந்தனையாளரும், பொருளாதார நிபுணருமான ஜேவியர் மிலேய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் அதிபர் தேர்தல் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்றது. எனினும், இந்தத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிச் சுற்றுத் தேர்தல் நடைபெற்றது.

இதில் ஜேவியர் மேலேய்க்கு 55.69 சதவீத வாக்குகள் பதிவாகின. அதையடுத்து, நாட்டின் அடுத்த அதிபராக அவர் பொறுப்பேற்கவிருக்கிறார். (04)

# காஸா குறித்து சீன - பிரான்ஸ் அதிபர்கள் தொலைபேசியில் உரையாடல்



காஸா நிலவரம் குறித்து சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரானும் தொலைபேசியில் பேசியுள்ளனர்.

காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேல் ராணுவம் படிப்படியாக உள்நுழைந்து தீவிரமான தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இதனால் காஸா நகரம் உருக்குலைந்துள்ளது.

காஸா நகரத்தில் உள்ள மருத்துவமனைகளை குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. இந்த தாக்குதலில் காஸாவில் அப்பாவி மக்கள் உயிரிழப்பதற்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் தாக்குதலில் பாதிப்புக்குள்ளாகியுள்ள காஸா நிலவரம் குறித்து சீனா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் அதிபர்களும் தொலைபேசியில் உரையாடியுள்ளனர்.

இதன்போது, சீன அதிபர் ஸி ஜின்பிங்கும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரானும் இஸ்ரேல் - பாலஸ்தீன போர் குறித்த தங்களின் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான நிலைமை மேலும் மோசமடைவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் குறிப்பாக மனிதாபிமானத்துக்கு எதிரான செயல்களை தடுக்க வேண்டும் என்றும் அவர்கள் பேசியுள்ளனர்.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

காஸா நிலவரம் குறித்து பீஜிங்கில் சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா, எகிப்து, சௌதி அரேபியா, ஜோர்டான் ஆகிய நாடுகள் இணைந்து ஆலோசிக்கவுள்ளன. இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னதாக சீனா, பிரான்ஸ் நாடுகளின் தலைவர்கள் உரையாடியுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. (04)

# உரிய ஆவணங்களின்றிய ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானிலிருந்து வெளிறுமாறு உத்தரவு!

உரிய ஆவணங்களின்றி தங்கள் நாட்டில் தங்கியிருந்த 4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கன் அகதிகள் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.


இது குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகையில், சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் ஆப்கன் நாட்டவர்கள் அனைவரும் வெளியேற்றப்படும் வரை இதற்கான நடவடிக்கை தொடரும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வெளியேற்றம் தொடர்பாக ஆப்கன் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபீஹுல்லா முஜாஹித் கூறும்போது, தங்கள் நாட்டில் உரிய ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டவர்களை பாகிஸ்தான் அரசு வெளியேற்றி வருகிறது. அந்த வகையில் ஆப்கானிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

1979-89 காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்திருந்தபோது அங்கிருந்து ஏராளமான அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர். அதன் பிறகு நடைபெற்ற போர்களின்போதும் ஆப்கன் அகதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்து வந்தது.

எனினும், ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அந்த நாட்டு அகதிகள்தான் காரணம் என்று பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது. இந்த நிலையில், நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அனைத்து அகதிகளும் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு இந்த மாதத் தொடக்கத்தில் உத்தரவிட்டது.

அதையடுத்து, உரிய ஆவணங்களின்றி பாகிஸ்தானில் தங்கியுள்ள சுமார் 17 லட்சம் ஆப்கானியர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (04)



# கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதியில் ஆபத்தான மரங்களை அகற்றும் பணி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதியில் உள்ள ஆபத்தான 46 மரங்கள் முழுமையாக அகற்றும் பணி இன்று ஆம்பமானது.

குறித்த வீதியில் ஆபத்தானதாக 57 மரங்கள் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் 46 மரங்களை முழுமையாகவும், 11 மரங்களின் ஆபத்தான கிளைகளை அகற்றுவதற்குமான நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (02)



# மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு, நவ. 21

சமூக சேவைத் திணைக்களத்தின் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த விசேட தேவையுடையவர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வு கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான புன்னகை மையம் ஒழுங்கு செய்திருந்த மேற்படி நிகழ்வில் சமூக சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அனோஜா, ஜெய்கா சர்வதேச தன்னார்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி யமடா ரெட்யூடா உட்பட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டி அல் - அக்ஸா தேசிய பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் 8 மாணவர் சித்தி

(எம்.எச்.எம் சியாஜ் - கற்பிட்டி)

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 8 பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

மொஹமட் அஸ்லம் அப்துல்லாஹ் யூசூப் - 166 புள்ளிகள், நியாஸ்தீன் மொஹமட் நாசிப் - 165 புள்ளிகள், சதாசிவம் நிதுஷா - 164 புள்ளிகள், நிமின்ஷன் பெர்ணாந்து சரண்யா - 153 புள்ளிகள், மொஹமட் அஸ்கர் ஹம்றத் ஹபா -153 புள்ளிகள், ஜெயதாசன் சென்றியா மிஸ்லி - 147 புள்ளிகள், ஹபீப் றஹ்மான் மொஹமட் யூனுஸ் - 144 புள்ளிகள், மொஹமட் ஹசான் பாத்திமா ஹயா - 144 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சார் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.




# 75 வயதிலும் வெறும் காலுடன் ஓடி தங்கம் முல்லைத்தீவு அகிலத்திருநாயகி சாதனை



அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ் மற்றும் சிரேஷ்ட விளையாட்டு வீரர்களுக்கான போட்டிகளில் இலங்கையிலிருந்து பங்கேற்ற முள்ளியவளை, முல்லைத்தீவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தரான திருமதி அகிலத்திருநாயகி இரண்டு தங்கப் பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார்.

1500 மீற்றர் நெடுந்தூர ஓட்டம், 5000 மீற்றர் நெடுந்தூர விரைவு நடை ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெங்கலப் பதக்கத்தையும், 5000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் நான்காம் இடத்தையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார். (04)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சபீனா வித்தியாலய மாணவிக்குப் பாராட்டு



(நூருல் ஹுதா உமர்)

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனைக் கல்வி வலய காரைதீவுக் கல்விக் கோட்டத்தின் மாளிகைக்காடு கமு.கமு.சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவி எம்.ஐ. சாஸியா ஸீனத் மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இந்த மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களில் சித்திப் புள்ளியான 70 புள்ளிகளுக்கு மேல் 13 மாணவர்கள் பெற்றுச் சித்தியடைந்து சித்தி வீதம் 81 வீதத்தினைப் பெற்றுள்ளார்கள்.

குறைந்த வளங்களைக் கொண்டு இப்பாடசாலை தொடர்ந்தும் பல்வேறு சாதனைகளை முன்னெடுத்துச் செல்ல பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாகவும், இவ்வடைவினைப் பெறுவதற்கு காரணமாய் அமைந்த மாணவர்களைப் பாராட்டுவதோடு இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்திய வகுப்பாசிரியை திருமதி எம்.ஏ. பஹ்மியா அவர்களுக்கும் ஏனைய பாட ஆசிரியர்கள், பகுதித்தலைவர் மற்றும் பெற்றோர் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதாக பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு குறுக்குத்தெருவிலுள்ள கடைகளில் தீயணைப்புத் திணைக்களம் கணக்கெடுப்பு

கொழும்பு புறக்கோட்டை பகுதியிலுள்ள குறுக்குத் தெருக்களில் பாதுகாப்பற்ற கட்டிடங்கள் மற்றும் அவற்றை நடத்தும் வர்த்தகர்களை அடையாளம் காணுமுகமாக பொலிஸாருடன் இணைந்து விசேட கணக்கெடுப்பொன்று நடத்தப்பட்டு வருவதாக தீயணைப்புத் திணைக்களத்தின் பிரதம தீயணைப்பு அதிகாரி எச்.ஆர். வில்சன் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் கொண்டாடப்படவுள்ள நத்தார் பண்டிகையை முன்னிட்டு இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேகொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் கொழும்பு குறுக்குத் தெருவில் உள்ள கட்டடமொன்று தீப்பிடித்ததில் ஊழியர்கள் ஒற்றைக் கதவின் வழியே வெளியேறும்போது ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக பாரிய ஆபத்து நிகழ்ந்துள்ளமை தெரிய வந்துள்ளதையடுத்தே இந்த கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தீயணைப்பு அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், சில கட்டடங்களில் மேல் தளத்தில் இருந்து கீழ் தளங்களுக்குச் செல்லக் கூடிய இரண்டாவது மார்க்கம் மூடப்பட்டு, ஒருபுறம் மட்டுமே திறக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கணக்கெடுப்பின் போது, குறுக்குத் தெருக்களில் ஏற்படும் நெரிசல் அபாயம் குறித்து சிறப்புச் சோதனை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய புதிய பட்டியலொன்று தயார் செய்யப்படும் எனவும், சில இடங்களில் நிலத்தடிக் கடைகள் இருப்பது தெரியவந்துள்ளது எனவும், அது குறித்து கவனத்தில் கொள்ளப்படும் எனவும் தீயணைப்புத் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்தார். (ரெந-36)

## பிக்மீ சாரதி மீது தரிப்பிட முச்சக்கரவண்டி சாரதிகள் தாக்கு பொலிஸ் மா அதிபர் பணிப்பு யாழ் பொலிசார் விசாரணை

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் பிக்மீ சாரதி ஒருவர் மீது தரிப்பிட முச்சக்கரவண்டி சாரதிகள் ஒன்றுகூடி அச்சுறுத்தல் விடுத்து, தாக்குதல் நடத்தியமை தொடர்பாக பொலிஸ் மா அதிபரின் பணிப்புக்கமைய யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (17) பலாலி வீதியில் திருநெல்வேலி பழம் வீதியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றபோது பொலிஸாரும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்ததாக பாதிக்கப்பட்ட பிக்மீ சாரதி கவலை வெளியிட்டதுடன் பிக்மீ நிறுவனத்திற்கும் தகவலளித்தார்.

குறித்த நிறுவனம் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய முறைப்பாட்டின் கீழ் குறிப்பிட்ட சாரதி இன்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு முறைப்பாடு பெறப்பட்டது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (O1)

## திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு விஜயம்




(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரான சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு விஜயமொன்றை இன்று மேற்கொண்டார்.

மாவட்ட அரசாங்க அதிபராக அண்மையில் கடமையேற்ற பின்னர் முதற் தடவையாக கண்காணிப்பு விஜயமொன்றை அவர் இன்று மேற்கொண்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலக உள்ளக வெளியக மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கடந்த காலங்களில் தேசிய மாவட்ட மாகாண மட்ட ரீதியில் சாதனை புரிந்த அலுவலக உத்தியோகத்தர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டார்கள்.

பிரதேச செயலகத்தில் இயங்கும் ஒவ்வொரு கிளையினையும் மேற்பார்வை செய்த மாவட்ட அரசாங்க அதிபர் அரச சேவை ஆளணி வளங்கள் பற்றாக்குறை தொடர்பிலும் அரச சேவைகளை நேர்த்தியாகவும் வினைத்திறனுடனும் மக்களுக்கு வழங்குவது தொடர்பில் தனது உரையின்போது தெரிவித்திருந்தார்.

மாவட்ட அரசாங்க அதிபரை உதவி பிரதேச செயலாளர் பொன்னாடை வழங்கி இதன்போது கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், உதவி மாவட்டப் பதிவாளர் அஸ்வர் மற்றும் கிளைத் தலைவர்கள் சக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 71,000 வரை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நோயாளர்களில் ஏராளமானோர் மேல் மாகாணம் மற்றும் கண்டி, குருணாகல், இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் மேல் மாகாணத்தில் உள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 48 வீதமாக அதிகரித்துள்ளது, என்றும் அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்புத் தொடர்பாக பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகளினால் வழங்கப்படும் அறிவுரைகளை சரிவரக் கடைப்பிடிக்காத நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை மாற்றியமைப்பதற்கான சட்டத் திருத்த நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்த பணிப்பாளர் நளின் ஆரியரத்ன, சம்மந்தப்பட்ட சட்டத் திருத்தத்திற்குப் பிறகு, மக்களுக்கு அது குறித்துத் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (ரெந-35)

## அதிக விலைக்கு சீனி விற்பனை வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு


(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போது, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு சீனி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிந்த பண்டார நவரெட்ன தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் திடீர் சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும், சுற்றிவளைப்பின்போது நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதலான விலைக்கு சீனி விற்பனை செய்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்த போதிலும், சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அவை விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல், நுகர்வோர் பார்வைக்காக வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு விற்றல், நுகர்வோருக்கு பொருத்தமில்லாத காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல் என்பன சட்டத்திற்கு முரணான குற்றச் செயல்களாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறுசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2023இல் வெளியிடப்பெற்றது.